(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 58.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 மார்ச் 09 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** கல்வி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** சுகாதார அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி,** *நீதி அமைச்சர்*

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் நிவாட் கப்ரால்,** நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ நஸீர் அஹமட்

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ ஜகத் குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ ஹரின் பிரனாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி

கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XVII, XVIII, XIX, XX மற்றும் XXI ஆம் பகுதிகளையும், நான்காவது தொகுதியின் VIII ஆம் பகுதியையும், ஆறாவது தொகுதியின் XVII, XVIII மற்றும் XIX ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கையின்—

(i) அனுமதி பெற்ற மதுபான உற்பத்திச் சாலைகள் தொடர்பாக மதுவரித் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்துவதிலுள்ள வினைத்திறனை மதிப்பீடு செய்தல் தொடர்பிலான அறிக்கையின் எட்டாவது தொகுதியின் XXIII ஆம் பகுதி;

(ii) காய்கறி வித்துக்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் செயன்முறையின் செயலாற்றல் தொடர்பிலான அறிக்கையின் எட்டாவது தொகுதியின் XXIV ஆம் பகுதி; மற்றும்

(iii) மனம்பிட்டிய மணல் அகழ்தல் செயற்திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு தொடர்பிலான அறிக்கையின் பத்தாவது தொகுதியின் I ஆம் பகுதி

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கைக் கடற்படையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2021 மார்ச் 01 ஆம் திகதிய 2117/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனம்

அவ்வறிக்கை மற்றும் பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) நெடுஞ்சாலைகள் அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 14 ஆம் திகதிய 2206/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(ii) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 24 ஆம் திகதிய 2207/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள், அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்—

(i) 2015 சனவரி 08 ஆம் திகதி ஆரம்பமாகி 2019 நவம்பர் 16 ஆம் திகதி முடிவடைந்த கால எல்லைக்குள் பதவிகளை வகித்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள், அரச கூட்டுத்தாபன ஊழியர்கள், ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையின் உறுப்பினர்களிற்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரித்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதிகள்; மற்றும்

(ii) 2015.01.15 தொடக்கம் 2018.12.31 வரையான காலத்தில் அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல்கள், மோசடிகள் தொடர்பாகப் புலனாய்வு செய்வதற்கான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை

ஆகியவற்றை சபையின் விசேட அனுமதியுடன் சிங்கள மொழியில் மாத்திரம் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) கல்வி அமைச்சர்—

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் இன்டநெஷனல் கொலிஜ் ஒவ் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிட்டெட்டை வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணிப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 செப்டெம்பர் 25 ஆம் திகதிய 2194/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னொலொஜி டிறெயினிங் சென்டர் (பிறைவெற்) லிமிட்டெட்டை தாதியியலில் தத்துவவியல் முதுமாணி பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 07 ஆம் திகதிய 2196/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியுட் ஒவ் ஹயர் எடியுகேஷன் (பிறைவெற்) லிமிட்டெட்டை வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணிப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 நவம்பர் 09 ஆம் திகதிய 2201/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் சினெக் கெம்பஸ் (பிறைவெற்) லிமிட்டெட்டை கற்கை நெறி மூலம் வியாபார நிருவாக முதுமாணிப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 28 ஆம் திகதிய 2208/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் றோயல் இன்ஸ்டிடியுட் கொழும்பு (பிறைவெட்) லிமிட்டெட்டை சர்வதேச பொருளியல் மற்றும் நிதியியல் வியாபார கௌரவ இளமாணிப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 01 ஆம் திகதிய 2208/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் பிஸ்னஸ் மனஜ்மென்ட் ஸ்கூல் (பிறைவெட்) லிமிட்டெட்டை வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணிப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 01 ஆம் திகதிய 2208/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(vii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் கொரைசன் கொலிஜ் ஒப் பிசினஸ் அன்ட் டெக்னொலொஜி (பிறைவெட்) லிமிட்டெட்டை உயிர் தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 01 ஆம் திகதிய 2208/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அப்பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(8) வர்த்தக அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் வருடாந்த அறிக்கைகளையும் கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கையை வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) வர்த்தக அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2020 நவம்பர் 17 ஆம் திகதிய 2202/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து அப்பத்திரத்தை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) நீதி அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா, அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்;

(ii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்; மற்றும்

(iii) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் (திருத்தம்) சட்டத்தின் கீழான கட்டளைகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) நுவரெலியா, பம்பரகெலே, பியதிஸ்ஸபுர இல. 1/24 எனும் முகவரியில் வதியும் திரு. ஏ. ஆர். எம். அபேரத்னவினது 2020.11.16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ சீ.பீ.ரத்னாயக்க சமர்ப்பித்தார்.

(2) (i) கொழும்பு 10, மருதானை, போர்ப்ஸ் வீதி, இல. பீ1/ஜீ2 எனும் முகவரியில் வதியும் திரு. எம். ஏ.என். பண்டாரவினது 2021.01.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) நுகேகொடை, கோட்டை வீதி, இல. 347/1ஏ எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ. சிறிசேன பெரேராவினது 2021.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்

கௌரவ சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்தார்.

(3) (i) ஹோமாகம, பிடிபன (தெற்கு), வெந்தேசிவத்த, இல. 516/5 எனும் முகவரியில் வதியும் திருமதி எம். ஏ.சீலவதீயினது 2020.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்;

(ii) பண்டாரகொஸ்வத்த, சிலாபம் வீதி, இல. 248/1 எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ. ஏ. சுபசிங்க வீரக்கொடியினது 2020.11.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்;

(iii) கொஹிலேகெதர, இஹலநாகலகமுவ, இல. 828/2 எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.எம்.கே. எஸ். செனவிரத்னவினது 2020.09.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) மஹவ, கோண்வெவ, கொஹொம்பகடவல எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ. எம். திலகரத்னவினது 2020.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்

கௌரவ தயாசிறி ஜயசேக்கர சமர்ப்பித்தார்.

(4) பிடபத்தர, தெஹிகஸ்ப, “மலீஷ” எனும் முகவரியில் வதியும் திரு. ஆர். வீ. பந்துலவினது 2020.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ நிமல் லான்ஸா சமர்ப்பித்தார்.

(5) வெலிகல்ல, கொடகதெனிய வீதி, இல. 130 எனும் முகவரியில் வதியும் திரு. அரம்பே கெதர சன்ஜீவ ரவீந்திர ராஜபக்ஷவினது 2020.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ அனுராத ஜயரத்ன சமர்ப்பித்தார்.

(6) வக்வெல்ல, ஹபுகல, மவுன்ட் பிளசன்ட், பீல்ல வீதி, இல. 31ஏ எனும் முகவரியில் வதியும் திரு. டீ. கே. ஜயசுந்தரவினது 2020.10.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ விஜித ஹேரத் சமர்ப்பித்தார்.

(7) மிரிஸ்ஸ, உடுபில எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.பீ. கவேனிஸினது 2020.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

(8) (i) கொலன்னாவ, கொலன்னாவ வீதி, அரசாங்க விடுதிகள், இல. 9/2 எனும் முகவரியில் வதியும் திரு. அஜந்த ருவன்பதிரணவினது 2021.01.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்;

(ii) பிலியந்தல, கெஸ்பேவ, இசுருபுர, இல. 14/3 எனும் முகவரியில் வதியும் திரு. எல். பீ. ஜயசுந்தரவினது 2020.01.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) கொத்தடுவ, மனிகமுல்ல வீதி, இல. 279/பீ எனும் முகவரியில் வதியும் திரு. பீ. வீ. எஸ். பிரியங்கர பெரேராவினது 2020.09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்

கௌரவ எஸ். எம். மரிக்கார் சமர்ப்பித்தார்.

(9) அகலவத்த, "ஸ்கூல் வீவ்" எனும் முகவரியில் வதியும் திருமதி எச். ஜீ. ரேணுகா தீபானி 2021.01.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ சன்ஜீவ எதிரிமான்ன சமர்ப்பித்தார்.

(10) (i) பேராதெனிய, உடஈரியகம, பிரகதி மாவத்தை, இல. 35/பீ/2 எனும் முகவரியில் வதியும் திரு. எம்.கே. பீ. ஹேரத்தினது 2020.10.16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்;

(ii) புஸ்ஸல்லாவை, இஹலகம, "கெத்சிரி" எனும் முகவரியில் வதியும் திருமதி ஓ.ஜீ. அனுஷா உதயங்கனீ குமாரியினது 2020.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) இஹல கொப்பேகடுவ, கொப்பேகடுவ, இல. 62/ஏ எனும் முகவரியில் வதியும் திரு. டீ. எம். ரத்னாயக்கவினது 2020.10.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவையும்

கௌரவ வசந்த யாபாபண்டார சமர்ப்பித்தார்.

(11) வெயாங்கொடை, பண்டாரநாயக்க வீதி, இல. 536/2 எனும் முகவரியில் வதியும் திரு. எம். பீ. லலித் பத்மசிறியினது 2021.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ சமர்ப்பித்தார்.

(12) மாகேவிட, வெலிகட, இல. 151 எனும் முகவரியில் வதியும் திரு. என். ஏ. எம். சீ. பிரியந்த குமாரவினது 2020.09.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ எம். டப்ளியூ. டீ சஹன் பிரதீப் விதான சமர்ப்பித்தார்.

(13) குளியாபிடிய, மீனேவ -இலுக்ஹேன, "ஹேரத் பாய" எனும் முகவரியில் வதியும் திரு. எச். எம். சரத் காமினி ஹேரத்தினது 2021.01.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கௌரவ சமன்பிரிய ஹேரத் சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அமர்வு :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 5.30 வரையும் இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. (2021 பெப்ரவரி 23) பிரேரணை மீதானது ,— "1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல், ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(மு.ப. 11.38 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக" என கௌரவ லலித் எல்லாவல பிரேரிக்க அதனை கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன் ஆமோதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.30 மணிக்கு கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் :** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2020 நவெம்பர் 17 ஆம் திகதிய 2202/7 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1):** வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 28 ஆம் திகதிய 2199/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2):** வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2199/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. இலங்கையில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு:** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள், அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாக பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் 12 ஆம் உறுப்புரை அங்கீகரிப்பதனாலும்;

பெண்களின் உரிமைகளின் முன்னேற்றத்திற்காக சட்டவாக்க அல்லது ஆட்சித்துறையின் உறுதிப்பாட்டு நடவடிக்கைக்கு 12(4) ஆம் உறுப்புரை ஏற்பாடு செய்வதனாலும்;

மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் (UDHR ); குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு (ICCPR ); பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு (ICESCR ); மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவங்களிலுமான பாரபட்சத்தை ஒழிப்பதற்கான சமவாயம் (CEDAW ) ஆகிய ஏனையவற்றுடன் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தும் பல்வேறு சர்வதேச சட்ட ஆவணங்களை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் ஒப்புறுதிப்படுத்தியுள்ளமையாலும்;

இலங்கை கையொப்பதாராக உள்ள, ஐக்கிய நாடுகளினால் வகுத்தமைக்கப்பட்ட நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளின் சூழமைவில், பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்தல் மற்றும் அனைத்துப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டல் ஆகியவை பிரதானமாக காணப்படுவதனாலும்;

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே தலைமையிலான பாராளுமன்றத்தின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், அவர்களின் பிரதிநிதித்துவம், சட்டவாக்கம், வரவுசெலவுத் திட்டமிடல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் ஆகியவற்றின் ஊடாக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்துவம் என்பனவற்றை ஆதரித்து வாதாடுவதற்கும் பிரதான போக்காக ஏற்படுத்துவதற்குமான பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான அவசியம் பற்றி தீர்மானித்துள்ளதாலும்; மற்றும்

பால்நிலை சமத்துவம் மேம்படுத்தப்படுவதையும் மதிக்கப்படுவதையும் மற்றும் இலங்கையில் அனைத்து பெண்களும் சிறுமிகளும் வலுவூட்டப்படுவதையும் உறுதிப்படுத்தி பால்நிலை அடிப்படையிலான பாரபட்சத்தை எதிர்கொள்ளும் பொருட்டு பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து விதப்புரைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

(அ) தொழில் வாய்ப்பு, பதவி உயர்வு வாய்ப்புகள் மற்றும் வேலைத்தலத்தில் துன்புறுத்தல்கள் உள்ளடங்கலான அனைத்து விதமான பால்நிலை அடிப்படையிலான பாரபட்சங்கள் பற்றிய பெண்களின் குறைகளை கேட்டல்;

(ஆ) அனைத்து துறைகளிலும் மற்றும் அனைத்து மட்டங்களிலும் போதிய அளவிலான உள்ளூர் வளங்களின் ஒதுக்கீடு மற்றும் இலங்கையில் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான அணுகல் ஆகியவற்றை பரிசீலித்தல் மற்றும் ஆதரித்து வாதாடுதல்;

(இ) பால்நிலையைப் பிரதான போக்காக ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தி பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் வாழ்வில் பாரபட்சம் மற்றும் எதிர்மறை தாக்கத்தை தடுப்பதற்காக அனைத்து தொடர்புடைய சட்டங்களையும் நுண்ணாய்வு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்;

(ஈ) பால்நிலை தொடர்பான பதில் நடவடிக்கைத் திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத் திட்டமிடல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக உரிய நிரல் அமைச்சுகள் மற்றும் அதிகாரிகளுடன் ஆதரவு நாடுதல்;

(உ) விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்வது மற்றும் ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் சமத்துவத்தை அடைவது தொடர்பான விடயங்களில் தகவல் பரவலை ஊக்குவித்தல்

(ஊ) தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களிலும் பொது, சிவில் சமூகத்திலும் மற்றும் தனியார் துறைகளிலும் தீர்மானம் மேற்கொள்ளும் அமைப்புகளில் அதிக பெண்கள் பிரதிநிதித்துவத்திற்காக ஆதரவு நாடுதல் மற்றும் ஆதரித்து வாதாடுதல்;

(எ) தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் பால்நிலை சமத்துவ கோட்பாடுகளின் ஒருங்கிணைப்பிற்கான நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல்;

(ஏ) இலங்கையில் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக அரச - தனியார் பங்காண்மைகளை ஊக்குவித்தல்;

(ஐ) பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் நாடுகளிடையில் நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை பகிர்தல் மற்றும் ஏனைய பாராளுமன்றங்களில் இருந்து கற்ற பாடங்களை மீளாய்வு செய்தல்; மற்றும்

(ஒ) மேலுள்ள விடயங்களுடன் தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான அனைத்து விடயங்களையும் பரிசீலித்தல்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளால் தடைபெறாமல், பாராளுமன்றத்தின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய ஆண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட இருபத்தைந்திற்கு (25) மேற்படாத உறுப்பினர்களைக் குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே சொல்லப்பட்ட விடயங்களை முழுமையாக பரிசீலனை செய்வதற்கு அவசியமென குழு கருதுகின்றவாறாக எவரேனும் ஆளை அதன் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை அதன் முன் கொண்டுவருமாறு எவரேனும் ஆளை வேண்டுவதற்கும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய் மூலமான எல்லாச் சான்றுகளையும் பெறுவதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் விசேடத்துவம் பெற்றவர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் கூடுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதன் முதல் கூட்டத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. அக்குழுவின் அறிக்கையொன்று, பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டவுடன் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு (08) வார காலப்பகுதியினுள் சபைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**10. ஒத்திவைப்பு ( சர்வேதச தொழிலாளர் அமைப்பின் 190 ஆம் இணக்கப்பாட்டினூடாகப் பெண்களை வலுவூட்டுதல்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என நெஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ இசுரு தொடன்கொட தலைமை தாங்குவாராக" என மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.52 மணிக்கு கௌரவ இசுரு தொடன்கொட தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க தலைமைதாங்கும் உறுப்பினர், பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்

அதன்படி பாராளுமன்றம், 2021 மார்ச் 10 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.